## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## நான்காம் பத்து

### மூன்றாம் திருமொழி - பேரணிந்து
### திருநாங்கூர்த் திருப்பதி 11
### 6. திருச்செம்பொன்செய்கோயில்

** பேர் அணிந்து உலகத்தவர் தொழுது ஏத்தும் *
பேரருளாளன் எம்பிரானை *
வாரணி முலையாள் மலர்மகளோடு *
மண்மகளும் உடன் நிற்ப **
சீரணி மாட நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
காரணி மேகம் நின்றது ஒப்பானைக் *
கண்டு கொண்டு உய்ந்து ஒழிந்தேனே 1

பிறப்பொடு மூப்பு ஒன்று இல்லவன் தன்னைப் *
பேதியா இன்ப வெள்ளத்தை *
இறப்பு எதிர்காலக் கழிவும் ஆனானை *
ஏழ் இசையின் சுவை தன்னை **
சிறப்புடை மறையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
மறைப் பெரும் பொருளை வானவர் கோனைக் *
கண்டு நான் வாழ்ந்து ஒழிந்தேனே 2

திடவிசும்பு எரி நீர் திங்களும் சுடரும் *
செழுநிலத்து உயிர்களும் மற்றும் *
படர்பொருள்களுமாய் நின்றவன் தன்னை *
பங்கயத்து அயனவன் அனைய **
திடமொழி மறையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
கடல் நிற வண்ணன் தன்னை நான் அடியேன் *
கண்டு கொண்டு உய்ந்து ஒழிந்தேனே 3

வசை அறு குறளாய் மாவலி வேள்வி *
மண் அளவிட்டவன் தன்னை *
அசைவறும் அமரர் அடியிணை வணங்க *
அலைகடல் துயின்ற அம்மானை **
திசைமுகன் அனையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
உயர்மணி மகுடம் சூடி நின்றானைக் *
கண்டு கொண்டு உய்ந்து ஒழிந்தேனே 4

தீ மனத்து அரக்கர் திறல் அழித்தவனே! என்று *
சென்று அடைந்தவர் தமக்கு *
தாய் மனத்து இரங்கி அருளினைக் கொடுக்கும் *
தயரதன் மதலையைச் சயமே **
தேமலர்ப் பொழில் சூழ் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
காமனைப் பயந்தான் தன்னை நான் அடியேன் *
கண்டு கொண்டு உய்ந்து ஒழிந்தேனே 5

மல்லை மா முந்நீர் அதர்பட * மலையால்
அணை செய்து மகிழ்ந்தவன் தன்னை *
கல்லின் மீது இயன்ற கடிமதிள் இலங்கை
கலங்க * ஓர் வாளி தொட்டானை **
செல்வ நான்மறையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
அல்லி மாமலராள் தன்னொடும் அடியேன் *
கண்டு கொண்டு அல்லல் தீர்ந்தேனே 6

வெஞ்சினக் களிறும் வில்லொடு மல்லும் *
வெகுண்டு இறுத்து அடர்த்தவன் தன்னை *
கஞ்சனைக் காய்ந்த காளை அம்மானைக் *
கருமுகில் திருநிறத்தவனை **
செஞ்சொல் நான்மறையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
அஞ்சனக் குன்றம் நின்றது ஒப்பானைக் *
கண்டு கொண்டு அல்லல் தீர்ந்தேனே 7

** அன்றிய வாணன் ஆயிரம் தோளும் துணிய *
அன்று ஆழி தொட்டானை *
மின் திகழ் குடுமி வேங்கட மலை மேல் *
மேவிய வேத நல்விளக்கை **
தென்திசைத் திலதம் அனையவர் நாங்கைச் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
மன்றது பொலிய மகிழ்ந்து நின்றானை *
வணங்கி நான் வாழ்ந்து ஒழிந்தேனே 8

களங்கனி வண்ணா! கண்ணனே! *
என்தன் கார்முகிலே! என நினைந்திட்டு *
உளம் கனிந்திருக்கும் அடியவர் தங்கள் *
உள்ளத்துள் ஊறிய தேனை **
தெளிந்த நான்மறையோர் நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
வளங்கொள் பேரின்பம் மன்னி நின்றானை *
வணங்கி நான் வாழ்ந்து ஒழிந்தேனே 9

** தேன் அமர் சோலை நாங்கை நன்னடுவுள் *
செம்பொன்செய் கோயிலின் உள்ளே *
வானவர் கோனைக் கண்டமை சொல்லும் *
மங்கையார் வாட்கலிகன்றி **
ஊனமில் பாடல் ஒன்பதோடு ஒன்றும் *
ஒழிவின்றிக் கற்று வல்லார்கள் *
மான வெண்குடைக் கீழ் வையகம் ஆண்டு *
வானவர் ஆகுவர் மகிழ்ந்தே 10

**அடிவரவு:** பேரணிந்து பிறப்பு திட வசை தீமனத்து மல்லை வெஞ்சினம் அன்றிய களங்கனி தேனமர் மாற்றரசர்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---